**28.10.2025.** CC. 207/2018 PW.7. டாக்டர். திரு. சுகவனேஸ்

**கடந்த 16.09.2025 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு முழுவதும் முடிவு பெறாமல் இருந்த நிலையில் இன்று மேற்படி சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் மேற்படி காயம்பட்ட நபரை 28.10.2016 ம் தேதி உள்நோயாளியாக சிகிட்சைக்கு அனுமதித்து 04.11.2016 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்தேன். அவருக்கு ஏற்பட்ட முதல் காயமானது கொடுங்காயம் என்றும், 2 வது காயம் சாதாரண காயம் என்றும் சான்று வழங்கினேன். **மேற்படி நான் வழங்கிய கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. பொதுவாக 68 வயதான நபருக்கு பற்கள் கழன்று விழுவது சகஜம் என்றால் சரிதான். விழுந்ததாக சொல்லப்படும் பல்லை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன 2 காயங்களைத் தவிர்த்து அ.சா1 ற்கு வேறு எந்த இரத்தக்காயங்களும் இல்லை என்றால் சரிதான். 2 வது காயத்தைப் பொறுத்து ஒரு நபர் வலி இல்லாமல் கூட வலி இருப்பதாக சொல்லலாம் என்றால் சரிதான்.

2. பொதுவாக 4 சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் போது ஓட்டுனர் திடீரென பிரேக் போட்டாலோ அல்லது விபத்து ஏற்பட்டாலோ, வாகன இருக்கையில் இருப்பவர்கள் அதற்கு முன்னுள்ள வாகன பாகங்களில் மோதும்போது காயங்களோ, பற்களோ விழ வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி காயம்பட்ட நபரை அனுமதிக்க வந்த சதீஸ் என்பவருக்கு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி காயம்பட்ட நபர் என் பக்கத்து ஊர்காரர் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.